**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**திருப்பூர்மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

**(24.05.2023 முதல் 28.05.2023)**

***அறிக்கைஎண் 041/2023*** ***தேதி.23..05.2023***

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின்கடந்தவாரவானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 19.05.23 முதல் 22.05.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 36°செமுதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 58 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11-20 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (19.05.2023 முதல் 22.05.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 28.05.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19/05 | 20/05 | 21/05 | 22/05 | தேதி | நாள்-1 24/05 | நாள்-2 25/05 | நாள்-3 26/05 | நாள்-4 27/05 | நாள்-5 28/05 |
| 4.6 | 1.8 | 0.3 | 8.1 | மழை (மி.மீ) | 4 | 3 | 4 | 0 | 3 |
| 37 | 36 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 35 | 35 | 35 |
| 26 | 24 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 23 | 23 | 22 |
| 7 | 6 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 4 | 6 | 6 | 7 | 8 |
| 79 | 84 | 78 | 65 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 79 | 59 | 58 | 58 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| 20 | 16 | 11 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 10 | 8 | 10 |
| 160 | 200 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (24.05.2023 முதல் 28.05.2023)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும்,

மணிக்கு 6-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர்மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பெங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 24-05-2023 | 2.0 | 8.0 | 12.0 | 3.0 | 6.0 | 17.0 | 6.0 | 3.0 | 3.0 | 2.0 | 18.0 | 2.0 | 4.0 |
| 25-05-2023 | 1.0 | 5.0 | 7.0 | 2.0 | 3.0 | 10.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 11.0 | 1.0 | 2.0 |
| 26-05-2023 | 2.0 | 6.0 | 7.0 | 4.0 | 4.0 | 10.0 | 5.0 | 2.0 | 3.0 | 2.0 | 10.0 | 2.0 | 5.0 |
| 27-05-2023 | 0.0 | 3.0 | 4.0 | 0.0 | 1.0 | 6.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 6.0 | 0.0 | 2.0 |
| 28-05-2023 | 1.0 | 6.0 | 8.0 | 2.0 | 4.0 | 13.0 | 4.0 | 1.0 | 2.0 | 1.0 | 13.0 | 1.0 | 3.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் 6 -10 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>எதிர்பார்க்கப்படும் மழையினை சரிவுக்கு குறுக்காக கோடை உழவுசெய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்அரிப்பினையும் தடுக்கலாம்.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பதனை மழையில்லா நேரங்களில் செய்து முடிக்கவும்.<br>மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதன் மூலம் அதிக வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம். |
| எள் | அறுவடை | எதிர்பார்க்கப்படும் வானிலையை பயன்படுத்தி அறுவடை செய்துள்ள எள் பயிரினை காலை 10 மணி முதல் மாலை 4 மணிக்குள் உலர்த்தி எள்ளினை பிரித்து பதப்படுத்தவும். |
| பருத்தி | | தற்போது நிலவும் அதிக வெப்பநிலை பருத்தியில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டும் பொழுது இமிடாகுளோரோபிட் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |

| | | |
|---|---|---|
| கரும்பு | | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் 10 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்க தகுந்த முட்டு கொடுக்கவும். |
| கால்நடைகள் | | மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

- மழையுடன் 12 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**